

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2025) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் கோபாலபுரம் கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி வளாகத்தில் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள விளையாட்டு விடுதி, கோயம்புத்தூர் மாவட்டம் நேரு விளையாட்டு வளாகத்தில் 4.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் ஆகிய விளையாட்டு மேம்பாட்டு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா. எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.

### நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கான

# விபத்து மரண இழப்பீடு ரூ.2 லட்சமாக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு – அரசாணை வெளியீடு!

சென்னை, ஆக.23-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் விபத்து மரண இழப்பீடு தொகை ரூ.1 இலட்சம் என்பது ரூ.2 இலட்சம் ஆகவும், விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பீட்டு தொகை ரூ. 20 ஆயிரம் என்பது ரூ.1 இலட்சம் ஆகவும், இயற்கை மரணத்துக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூ.20 ஆயிரம் என்பது ரூ.30 ஆயிரம் என உயர்த்தி உத்தரவுக்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு:-

2025 - 2026 -ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு, விபத்து மரணத்துக்கான இழப்பீடு, விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்கு நிதி உதவி, இயற்கை மரணத்துக்கான நிதி உதவி, இறுதிச்சடங்கு செய்வதற்கான நிதி உதவி ஆகியவை உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின்படி, நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு விபத்து மரணத்துக்காக வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டுத் தொகை ரூபாய் 1 இலட்சம் என்பதை ரூபாய் 2 இலட்சம் என்றும், விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்காக வழங்கப்பட்டு வரும் நிதிஉதவி ரூபாய் 20 ஆயிரம் என்பதை ரூபாய் 1 இலட்சம் என்றும், இயற்கை மரணத்துக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூபாய் 20 ஆயிரம் என்பதை ரூபாய் 30 ஆயிரம் என்றும், இறுதிச்சடங்குக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூபாய் 2,500 என்பதை ரூபாய் 10 ஆயிரம் என்றும் உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதற்குரிய அரசாணை 4.8.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா –

# அன்னம் தரும் அமுதகரங்கள் திட்டம் - தொடர் நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஆக. 23-

மக்கள் முதல்வரின் மனிதநேய விழா, சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப்ரவரி 19வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் நடைபெறும் காலை உணவு வழங்கும் “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்” அமைச்சர் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

24/08/2025 முதல் 05/09/2025 வரை “அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:

**நாள் 24.8.25 ஞாயிற்றுக்கிழமை 186 ஆம் நாள் – அம்பத்தூர் வடக்கு பகுதி –** 1) வட்டம் 80, தாங்கள் பூங்கா புதூர் மெயின் ரோடு, விஜயலட்சுமிபுரம், வட்ட செயலாளர் வெ. இராதாகிருஷ்ணன். 2) வட்டம் 81, அம்பத்தூர் OT பஸ் நிலையம், வட்ட செயலாளர் மு.இரகு

**நாள் 25.8.25 திங்கட்கிழமை 187 ஆம் நாள் – வில்லிவாக்கம் மேற்கு பகுதி –** 1) வட்டம் 95 தாந்தோணி அம்மன் கோயில் தெரு, வட்ட செயலாளர் மா. அகிலன். 2) வட்டம் 95 அ புதிய ஆவடி சாலை, லட்சுமிபுரம், வட்ட செயலாளர் பா. ஜானி

**நாள் 26.8.25 செவ்வாய்க்கிழமை 188ஆம் நாள்– துறைமுகம் தொகுதி –** 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59 அ, எல்லீஸ் ரோடு, அண்ணா சாலை, வட்ட செயலாளர் வே.பா பிரபாகரன். 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55ஆ,1 ஆச்சாரப்பன் தெரு, தாதா முத்தியப்பன் தெரு சந்திப்பு. வட்ட செயலாளர் ஆர்.ஏ. அஸ்லாம்...



**நாள் 27.8.25 புதன்கிழமை 189 ஆம் நாள் – திரு.வி.க நகர் தெற்கு பகுதி –** 1) வட்டம் 76 செல்லப்பா தெரு, விநாயகர் கோயில் அருகில், வட்ட செயலாளர் எஸ். சசிகுமார். 2) வட்டம் 75 அ எஸ். எஸ் புரம் பகுதி, இரா.வீரமணி, சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் விவசாய அணி

**நாள் 28.8.25 வியாழக்கிழமை 190ஆம் நாள் – கொளத்தூர் கிழக்கு பகுதி –** 1) 70வது வட்டம் SSV கோயில் இரண்டாவது தெரு, பெரம்பூர் வட்ட செயலாளர் பா.அன்பரசு. 2) 67அ வட்டம், திரு.வி .க நகர் பஸ் நிலையம் அருகில், வட்ட செயலாளர் K.ஜார்ஜ் குமார்

**நாள் 29.8.25 வெள்ளிக்கிழமை 191 ஆம் நாள் – திரு.வி.க நகர் வடக்கு பகுதி –** 1) 72வது வட்டம், வாசுகி நகர் குடிசைமாற்று வாரிய குடியிருப்பு அருகில் கன்னிகாபுரம். வட்ட கழக செயலாளர் M.A.டீக்கா, 2) 72அ வட்டம், நரசிம்ம நகர் (மாநகராட்சி பள்ளி அருகில்) புளியந்தோப்பு, வட்ட கழக செயலாளர் M.Z. அபோய்

**நாள் 30.8.25 சனிக்கிழமை 192ம் நாள் – வில்லிவாக்கம் கிழக்கு பகுதி –**1) வட்டம் 98 அ காமராஜ் தெரு சந்திப்பு வட்ட செயலாளர் சி. தேவராஜ்.2) வட்டம் 98 அம்பேத்கர் நகர் வட்ட செயலாளர் K. பாஸ்கர்,

**நாள் 31.8.25 ஞாயிற்றுக்கிழமை 193 ஆம் நாள் – கொளத்தூர் மேற்கு பகுதி –** 1) வட்டம் 69 G K M காலனி இரண்டாவது தெரு வட்ட செயலாளர் M.J.C பாபு, 2) வட்டம் 64 அ G.K.M காலனி, 36 வது தெரு அருகில், மறைந்த சிட்டிபாபு நினைவு மன்றம் வட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன் M.D

**நாள் 1.9.25 திங்கட்கிழமை 194ஆம் நாள் – எழும்பூர் வடக்கு பகுதி –**1) வட்டம் 99 பிரிக்கிளின் சாலை, மாநகர் சந்திப்பு, வட்ட செயலாளர் ஆர். எம் ரங்கநாதன், 2) வட்டம் 99 அ டாக்டர் அழகப்பாசாலை லேடர்ஸ் கேட் மெயின் சந்திப்பு, வட்ட செயலாளர் சி. சேகர்,

**நாள் 2.9.25 செவ்வாய்க்கிழமை 195 ஆம் நாள் – அம்பத்தூர் கிழக்கு பகுதி –**1) வட்டம் 82 அ கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில் கள்ளிகுப்பம், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டி. லோக பிரகாஷ், 2) வட்டம் 82 20 B பஸ் நிலையம் அருகில், மேனாம்பேடு. அம்பத்தூர் வட்ட செயலாளர் மூ.சண்முகம்,

**நாள் 3.9.25 புதன்கிழமை 196 ஆம் நாள் – எழும்பூர் தெற்கு பகுதி –** 1) வட்டம் 58 அல்லிக்குளம், வட்ட செயலாளர் வி. விஜயகுமார், 2) வட்டம் 58அ A.P ரோடு லியோ பேக்கரி அருகில். வட்ட செயலாளர் R.பாபு.

**நாள் 4.9.25 வியாழக்கிழமை 197 ஆம் நாள் – அம்பத்தூர் தெற்கு பகுதி –**1) வட்டம் 88 பாடி குமரன் நகர், மகாத்மா காந்தி ரோடு, பிள்ளையார் கோவில் அருகில் வட்ட செயலாளர் சி. சீனிவாசன், R. சண்முகசுந்தரம், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர், 2) வட்டம் 87 பஜனை கோயில் தெரு, பாடி, வட்ட செயலாளர் த. பிரகாஷ் குமார்

**நாள் 5.9.25 வெள்ளிக்கிழமை 198 ஆம் நாள் – துறைமுகம் தொகுதி –** 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54. தங்கசாலை தெரு அரசு அச்சகம், வட்ட செயலாளர் எம். ஜெய்சங்கர். 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60, 2 கோபால் செட்டி தெரு, 4வது கடற்கரை சாலை சந்திப்பு, வட்ட செயலாளர், கே.கவியரசு

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க. பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச்செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் கிளை கழகங்கள்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் என்.கிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு வருகின்ற சட்டமன்றத் தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி கிளை கழக சம்மந்தப்பட்ட மினிட் புத்தகங்களை ஆய்வு செய்தார் உடன் இ.மாணிக்கம், கன்னியப்பான், டில்லிபாபு, குப்புசாமி, சீனிவாசன், ராஜேந்திரன், ஏ.வி.பாலாஜி, வளர்மதி குமார், நீலா கோவிந்தசாமி, அரிபாபு, கே.மணி, கோவர்த்தனம் உள்பட கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள் உள்ளனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கத்தில் ஊடக விவாதங்களில் பங்கேற்கும் கழக முன்னணியினரையும் கழகத்தின் செய்தித்தொடர்புக் குழுவையும் சந்தித்து ஆலோசனைகளை வழங்கினார்.

### பீகாரில் ராஜ்கிரில் ஆக.29 முதல் செப். 9 வரை நடைபெற உள்ள

# “ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை - 2025”!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்!

சென்னை, ஆக.23-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பீகார் மாநிலம் ராஜ்கிரில் 29.8.2025 முதல் 7.9.2025 வரை நடைபெற உள்ள “ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025” யை தமிழ்நாட்டில் பொதுமக்களின் பார்வைக்காக நேற்று (22.08.2025) அறிமுகப்படுத்தினார்.

“ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025” பீகார் மாநிலம் ராஜ்கிரில் ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 7, 2025 வரை நடைபெற உள்ளது. சிறப்பு வாய்ந்த இந்தப் போட்டியில் 8 ஆசிய நாடுகள் மோதுகின்றன.

இப்போட்டியில் இந்திய அணி, மலேஷியா, ஜப்பான், சீனா மற்றும் கஜகஸ்தான் ஆகிய அணிகளுடன் A பிரிவில் இடம் பெற்றுள்ளது. கொரியா, வங்கதேசம் மற்றும் சீன தைபே அணிகள் B பிரிவில் இடம் பெற்றுள்ளன. இதில் ஆசிய பட்டம் வெல்லும் அணி 2026 ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பைக்கு நேரடியாக தகுதி பெறும்.

தமிழ்நாடு ஹாக்கி யூனிட் ஏற்பாட்டில் தமிழ்நாட்டில் ‘‘ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025” யை தமிழ்நாட்டில் பொதுமக்களின் பார்வைக்காக நேற்று (22.08.2025) அறிமுகப்படுத்தி, ‘‘பாஸ் தி பால் டிராபி சுற்றுப்பயணத்தை” (PASS THE BALL TROPHY TOUR) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும் பொதுமக்களின் பார்வைக்காக “ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை” பயணம் செய்ய உள்ளது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய ஹாக்கி சம்மேளனத்தின் பொருளாளரும் தமிழ்நாடு ஹாக்கி யூனிட் தலைவருமான சேகர் ஜெ. மனோகரன், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் பொருளாளர் கே. இராஜராஜன், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் இணை செயலாளர் டி. கிளெமென்ட் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.15.29 கோடியில் 85 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்!

## கட்டுமானப் பணியை அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஆக.23-

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று (22.8.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எல்லீஸ்புரம் திட்டப்பகுதியில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் ரூ.15.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 85 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணியினை தொடங்கி வைத்தனர்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1974 ஆம் ஆண்டு எல்லீஸ்புரம் திட்டப் பகுதியில் 4 தொகுப்புகளாக 71 குடியிருப்புகள் தரை மற்றும் 2 தளங்களுடன் கட்டப்பட்டது.

தட்ப வெப்ப சூழ்நிலையின் கராரணமாக இக்கட்டடம் பழுதாகிவிட்டதால் இடிக்கப்பட்டு மறுகட்டுமான திட்டத்தின் கீழ் ரூ.15.29 கோடி மதிப்பீட்டில் தூண் மற்றும் 5 தளங்களுடன் 85 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட உள்ளது.

இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 410 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ந.ப்ரியா ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, தலைமை பொறியாளர்கள் வி.எஸ். கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மேற்பார்வை பொறியாளர் இளம்பரிதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எல்லீஸ்புரம் திட்டப்பகுதியில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் ரூ.15.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 85 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணியினை குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ராஜன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி. சிங், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டல குழு தலைவர் ப.ஸ்ரீராமுலு, தலைமை பொறியாளர் வி.எஸ்.கிருஷ்ணசாமி, மேற்பார்வை பொறியாளர் (பொ) இளம்பரிதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.